தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.24

# The Role of Children's Literature in Shaping Future Society

**M. Rajalakshmi[1*], Dr. G. Satheeswaran[2], Dr. M. Karuppiah[3],**
[1]Research Scholar, Department of Tamil, Kalasalingam Academy of Research and Education, Krishnankovil, Viruthunagar -626126
[2]Research Supervisor, Assistant Professor of Tamil,
Kalasalingam Academy of Research and Education, Krishnankovil, Viruthunagar -626126
[3]Co-Supervisor, Assistant Professor of Tamil, SSM College of Arts and Science, Dindigul – 624002.
*Corresponding Author: mrajalakshmi.joan85@gmail.com.

**Article Info:** Received on 27-May-2026, Revised on 29-May-2026, Accepted on 09-June-2026.

## ABSTRACT

Children's Literature holds a special place in Tamil Literature. While most other literary genres largely depict lives, experiences, and societal realities, children's literature focuses on young readers' thoughts, emotions and imagined worlds. Among the notable writers in this genre, Vishnupuram Saravanan short story Kayiru ("The Rope") is noteworthy. The novel effectively depicts the interaction between children and society, demonstrating how societal system shape young minds. It demonstrates how society imposes caste – based prejudices and discriminatory attitudes on youngsters, despite their inherent desire for equality and inclusivity. Based on this perspective, the current research investigates how Kayiru reflects the impact of social conditioning on children, as well as the consequences for the development of a more equal future society.

***Keywords**: Tamil Literature, Children's Literature, vishnupuram Saravanan, Kayiru- Short Story.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

# சிறார் இலக்கியமும் எதிர்காலச் சமூகமும்

[1]**மு. ராஜலெட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிருஷ்ணன் கோவில் - 626126
மின்னஞ்சல்: mrajalakshmi.joan85@gmail.com
[2]**முனைவர் ஞா. சத்தீஸ்வரன்,** ஆய்வு நெறியாளர் மற்றும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிருஷ்ணன் கோவில் - 626126.
[3]**முனைவர் மு. கருப்பையா,** இணை நெறியாளர் மற்றும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், எஸ். எஸ். எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல் - 624002.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியப் படைப்புகளில் சிறார் இலக்கியம் ஒரு தனித்துவமான இடத்தைப் பெறுகின்றது மற்ற இலக்கியங்கள் எல்லாம் பெரியோரின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றது. ஆனால் சிறார் இலக்கியமோ சிறியோரின் சிந்தனையாற்றலைப் பேசுகின்ற இலக்கியமாகத் திகழ்கின்றது. சிறார் படைப்பாளர்களில் ஒருவரான விஷ்ணுபுரம் சரவணனின் கதைகளில் முக்கியமான ஒன்று கயிறு எனும் சிறுகதை யாகும். இச்சிறுகதை சமூகத்திற்கும் குழந்தைகளுக்கும் உள்ள தொடர்பை சித்தரிப்பதாக உள்ளது. சமூகம் குழந்தைகள் மனதில் சமமான வாழ்வியலுக்கு எதிரான சாதியச் சிந்தனைகளைக் குழந்தைகள் மீது திணிக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**குறிப்புச் சொற்கள்:** தமிழ் இலக்கியங்கள், சிறார் இலக்கியங்கள், விஷ்ணுபுரம் சரவணன், கயிறு சிறுகதை.

**முன்னுரை**

சிறார் இலக்கியங்களைச் சிறுவர் இலக்கியம் என்றும் குழந்தை இலக்கியம் என்றும் பாலகர் இலக்கியம் என்றும் பல்வேறு பெயர்களில் அழைப்பர். இவ்விலக்கியம் சிறார்களிடத்தில் நேர்மையான சிந்தனைகள் மற்றும் ஒழுக்கங்கள் ஆகியவற்றைப் போதிக்கின்றது என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் குழந்தைகளிடம் நல்ல குடிமக்களை உருவாக்குதல், மனிதாபிமான சிந்தனைகளை அறிவுறுத்துதல், சமூகத்தில் உள்ள வேற்றுமைகளைக் களைதல், ஒற்றுமையை ஏற்படுத்துதல், எதிர்கால அறிவுசார் தலைமுறையை உருவாக்குதல் போன்ற சிந்தனைகள் படைக்கப்பட்டுள்ளன. இக்கருத்துக்கள் சார்ந்த செய்திகளைச் சிறார் இலக்கியமான கயிறு எனும் சிறுகதை எடுத்துரைக்கின்றது. இச்சிறுகதையில் சிறாரின் எதிர்காலச் சமூகத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

**சிறார் - சொல் விளக்கம்**

சிறு என்னும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்ததே சிறார் எனும் சொல்லாகும். மேலும் சிறுமை என்ற சொல்லில் இருந்து சிறார் என்ற சொல் உருவானது என சொற்பிறப்பியல் அகராதி எடுத்துரைப்பதைக் காணலாம். மேலும் சிறார் என்னும் சொல்லைச் சங்க இலக்கியங்களில் காணும் போது **"புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்"**[1] எனப் புறநானூறு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு அறிவதன் மூலம் சிறார் எனும் சொல் சிறுவரைக் குறிப்பதாக உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**சிறார் இலக்கியத்தின் வகைகள்**

அறிவியல் கதைகள், கவிதைகள், நாடகங்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் போன்றவை சிறார் இலக்கியங்களாகக் கருதுவர். இவ்விலக்கியங்களில் சிறாரிடத்தில் எதிர்கால சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் எடுத்தியம்புகிறார்.

**சிறாரும் சிறார் இலக்கியமும்**

சிறார்கள் சிறார் இலக்கியங்களை வாசிக்கின்ற பொழுது வாசிப்பின் ஆர்வத்தையும் சமூகத்தின் மீதான பார்வையையும் படைப்புத்திறனையும் புதிய அறிவியல் செய்திகளையும் அறிந்து கொண்டு தனக்கான எதிர்காலத்தைக் கட்டமைக்க முற்படுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளுக்கு நல்ல ஒரு இயற்கை சார்ந்த சூழலியல் இல்லை என்பதை விஷ்ணுபுரம் சரவணன் கூறும்போது, "நம்ம ஊர் எல்லையில எண்ணெய் எடுக்கிற கம்பெனி இருக்கு இல்ல. அது தேவைக்காகத் தண்ணீரை அதிகளவு எடுப்பதனாலும், குழாய்ல கசியற எண்ணெய் குடிநீர் மட்டத்தில் கலந்திடுவதாலயும்தான் நம்ம ஊருக்கு சுத்தமான தண்ணியே வரலையாம். அவங்க வீட்டுல பிடிச்ச தண்ணிய பார்த்துதான் ஷாக் காயிட்டோம் என்றாள் ஓவியா. ஷாக்காவற அளவுக்கு என்ன இருந்துச்சு? என்று கேட்டாள் பவித்ரா. ஒரு அன்னக்கூடையை வெச்சி தண்ணீ அடிச்சோம். அப்படியே எண்ணெய் மிதக்குற மாதிரியே இருந்துச்சு அந்தத் தண்ணீ. எண்ணெய் நாத்தமும் அடிச்சுது! என்று கண்களை அகலமாக விரித்துச் சொன்னாள் ஓவியா."[2] என தனது ஒற்றைச் சிறகு ஓவியா எனும் சிறுகதையில் நல்ல தண்ணீர்க்கான சூழல்கூட இன்றைய சமூகத்தில் இல்லை என்பதையும் எதிர்காலத்தில் குழந்தைகள் இதனை எதிர்க்கொண்டு எப்படி வாழப் போகிறார்கள் என்பதையும் கவலையாகக் கதைகளில் பதிவு செய்கிறார் என்பதை அறிவதனால் அறிவியல் சார் சூழலியலை அறிய முடிகின்றது.

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

**கயிறு சிறுகதை காட்டும் சமூக ஏற்றத்தாழ்வு**

பாரதியார் எதிர்கால சமூகத்தைக் கட்டமைப்பதற்கு இளைஞர்களையோ பெரியவர்களையோ அழைத்துப் பேசாமல் சிறார்களான குழந்தைகளிடம் கூறும்போது,

**" சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"[3]**

எனக் குழந்தைகளை அழைத்துப் பேசும் முறையை ஆராய்கின்ற பொழுது குழந்தைகளால் மட்டும்தான் எதிர்கால புதிய சமூகத்தைக் கட்டமைக்க முடியும் என அவர் உணர்ந்திருக்கின்றார்.எனவே குழந்தைகள் தானே இவர்கள் என எண்ணிவிடாமல் குழந்தைகள் தான் எதிர்கால சமூகத்தை உருவாக்கும் தூண்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். மனிதனைக் கட்டிப்போடும் சமூகக் கட்டமைப்புகளின் சின்னமாக சாதி மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. இன்றும் பல இடங்களில் சாதியை வேறுபடுத்திக் காட்டும் ஒரு சில அடையாளங்கள் காணப்படுகின்றன என்பதைச் சிறார் இலக்கியங்களில் காணலாம். அந்த வகையில் கயிறு எனும் சிறுகதையில், **" இல்லம்மா... அந்தக் கடைக்கார அண்ணன்கிட்ட, அம்பேத்துக்கும் எனக்குக் கட்டி விட்ட மாதிரியே ஒரு மஞ்சள் கயிறு கேட்டேன். அவர் ரொம்பக் கோவமாயிட்டாரு... 'அவன் எல்லாம் இந்தக் கயிறெல்லாம் கட்டக்கூடாது. நீயும் இப்படி எல்லாம் யார்கிட்டேயும் கேட்கக்கூடாது' ன்னு ரொம்ப சத்தமா சொன்னார்ம்மா.. அதைச் சொல்றப்ப அவர் கண்ணு சிவப்பாயிடுச்சு... பார்க்கிறதுக்கே பயமா இருந்துச் சும்மா"[4]** எனக் கயிறு எனும் சிறுகதை எடுத்துரைப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வான சிந்தனைகளைக் கூறி சிறார்களை இச் சிந்தனையில் இருந்து விடுவிக்க கதையாசிரியர் முயல்கின்றார் என அறிய முடிகின்றது.

எல்லா உயிர்களும் சமமாகப் படைக்கப்பட்டிருக்கின்ற பொழுது மனித உயிர் மட்டுமே ஏற்றத்தாழ்வு பேசி எழுச்சியுறாமல் இருக்கின்றது. பிறப்பின் அடிப்படையில் பேதம் கற்பிப்பது என்பது சிறப்பிற்குரியவை இல்லை என்பதை வள்ளுவரும்,

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"[5]**

எனக் குறிப்பிடுவதற்கு ஏற்ப கயிறு எனும் சிறுகதையிலும் சமத்துவ சிந்தனை குறித்து அறிய முடிகின்றது.

**சிறார்களின் சிந்தனைத் திறன்**

சிறார்களின் சிந்தனைத்திறன் இன்றைய காலகட்டத்தில் சிறார்களுக்கு நிறைய அறிவியல் சார் சிந்தனைகளைச் சிந்திப்பதற்கு இணையம் தொடர்பான சாதனங்கள் உள்ளன. குழந்தைகள்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

ஒளிப்படங்கள் மற்றும் விளையாட்டுகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் தான் வளர்கின்ற சமூகச் சூழலோ சாதி மத ஏற்றத்தாழ்வுப் படி இயக்குகின்றது.

அந்த வகையில் கயிறு எனும் சிறுகதையில் கூட சாதி வேறுபாடுகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது, **"நாம எல்லாரும் ஒரே ஆளுங்க... அவங்க வேற ஆளு, நாம் உயர்ந்த ஆளுங்க... அவங்க எல்லாம் நமக்குக் கீழ... அதனால் அந்தப் பையன் இந்த கலர்ல கட்டக்கூடாதுனு சொன்னார்... இதைப் பத்தி மறுபடியும் என்கிட்ட பேசாதேன்னு சொன்னதும் எனக்கு ரொம்ப கோபமா வந்துச்சு... என்னைய விட அம்பேத்துதானே அதிகமா மார்க் வாங்குவான்... பேச்சுப் போட்டியிலும் அவந்தான் ஃபர்ஸ்ட் அப்பறம் எப்படி அவன் எனக்குக் கீழேன்னு நெனச்சு குழப்பமா இருந்துச்சு" என்றான் செழியன். "அப்பறம்..." என்றார் அம்மா. எனக்கும் அம்பேத்துக்கும் உள்ள ஃப்ரண்ட்ஷிப்பை அந்தக் கயிறு பிரிச்சுடுமோன்னு தோணுச்சு...அதான்" என்று சொல்லி வலது கையைக் காட்டினான். அவன் கையில் அந்த மஞ்சள் நிறக் கயிறு இல்லை. அந்தக் கடை வாசல்லயே கயிற்றை அவுத்து கீழே போட்டுட்டேன் என்றான்"[6].** தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வான சிந்தனையைக் குழந்தைகள் வளர்கின்ற சூழல் தந்தாலும் குழந்தைகள் அச்சிந்தனைக்கு இடந்தராமல் புறக்கணிப்பதாகக் கயிறு என்னும் சிறுகதை அமைகின்றது. எனவே எதிர்கால சமத்துவ சமூகத்தைக் கயிறு எனும் சிறுகதை கட்டமைக்கிறது.

**சிறார் இலக்கியமும் மனிதாபிமான சிந்தனையும்**

இச்சமூகம் சாதிய அடிமைத்தனத்திலிருந்து விடுபட குடும்பத்தில் இருந்து தான் தொடங்க வேண்டும். அந்த வகையில் தனது கதையில் வரும் வளர்மதி எனும் கதாப்பாத்திரம் சமூகத்தின் மீது மனிதாபிமான அக்கறையோடு செயல்படுகிறாள் என்பதை, **"அப்படி எதைச் சொல்கிறான் என்று புத்தக அறையில் படித்துக் கொண்டிருந்த அம்மா வெளியே வந்து பார்த்தார். செழியன் வலது கை மணிக்கட்டில் மஞ்சள் நிறத்தில் ஒரு கயிறு கட்டியிருந்தான். அதைப் பார்த்ததும் அம்மாவுக்குப் பெரும் அதிர்ச்சி. ஆனால்,அதைத் தன் முகத்தில் அவர் காட்டிக் கொள்ளவில்லை ஏனென்றால் அவர்கள் வீட்டில் யாருக்கும் கையில், கழுத்தில் கயிறு கட்டிக் கொள்ளும் பழக்கம் இல்லை."[7]** என ஆசிரியர் காட்டுகிறார்.

ஒவ்வொரு குடும்பமும் இச்சமூகத்தின் மீது மனிதாபிமான சிந்தனையோடு கட்டமைக்கப்படுமேயானால் இச்சமூகம் என்றைக்கே சமூக ரீதியாக விடுதலை அடைந்திருக்கும். வளர்மதி என்னும் கதாப்பாத்திரம் தன்மகன் மீது கொண்ட அக்கறையினால் மட்டும் கயிறு கட்டிக் கொள்ள விரும்பவில்லை என்பதல்ல பொருள். இச்சமூகத்தின் மீதுள்ள அக்கரையினால் தான் அவர்கள் கயிறு கட்டிக் கொள்ளவில்லை என்பதை அறிய முடிகிறது.

,| Copyright © Author(s)

தமிழ் இலக்கியங்கள் இக்கருத்தியலைப் பேசியிருந்தாலும் அதைத் தாண்டி வள்ளலார்,

**"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே**
**சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே**
**ஆவியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்"[8]**

எனும் வள்ளலாருடைய வார்த்தைகளில் வளர்மதி வளர்ந்துள்ளாள். வளர்ந்தது மட்டுமல்லாமல் எதிர்கால சமூகத்தையும் மாற்ற வேண்டுமென்ற மனமுடையவளாக வளர்மதி இருக்கிறாள் என்பதை ஆராய முடிகிறது.

**கயிறு கதையில் அறிவுசார் கட்டமைப்பு**

ஒரு சமூகம் தனது கட்டுப்பாட்டோட மட்டுமே இயங்கும். புதிய சமூகத்தைப் படைக்காது. ஆனால் அச்சமூகத்தில் வளரும் குழந்தைகளோ பழைய சமூகக் கட்டுப்பாட்டை மீறி புதிய எதிர்கால அறிவுசார் சமூகத்தை உருவாக்கத் துடிக்கிறார்கள் அந்த வகையில் கயிறு சிறுகதையில், **"ஓ! அப்படியா நல்லது. உன்னோட பெஸ்ட் ப்ஃரெண்ட் யாரு?" "அம்பேத்" சட்டென்று சொன்னான் செழியன். இருவரும் ஒரே வகுப்புதான். செழியன் பக்கத்தில் தான் அம்பேத் உட்கார்ந்திருப்பான் இருவரும் ரொம்ப நல்ல நண்பர்கள். இருவரும் மதிய உணவை ஒன்றாக அமர்ந்தே சாப்பிடுவார்கள். அம்பேத் வீட்டுக்கு விளையாடவும் படிக்கவும் அடிக்கடி செல்வான் செழியன். அதேபோல செழியன் வீட்டுக்கு வருவான் அம்பேத்."[9]** என ஆசிரியர் கூறுவதன் மூலம் எதிர்கால சமத்துவ அறிவுசார் சமூகத்தைப் படைக்க வேண்டுமெனக் கருதுகிறார் என்பதை அறிய முடிகிறது. நட்பு என்பது மாசற்ற அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் என்பதை அறிந்த வள்ளுவரும்,

**“மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு"[10]**

எனக் கூறுவதனால் உண்மையான நட்பென்பது வேறுபட்டு அல்லாது ஒன்றுபட்டு நிற்பதே ஆகும். இதனை உணர்ந்த விஷ்ணுபுரம் சரவணன் தனது கயிறு கதையில் செழியன், அம்பேத் என்ற இரு கதாப்பாத்திரங்கள் மூலம் எதிர்கால அறிவுசார் சமூகத்தை உருவாக்க நினைக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

**திருப்புமுனையும் திருத்தும் முறையும்**

குழந்தைகள் வளர்கின்ற சூழலான பள்ளிக்கூடம் மற்றும் பழகும் நண்பர்களின் மூலம் சாதி கற்பிக்கப்படவில்லை என்றாலும் இச்சமூகம் குழந்தைகளிடம் சமூக ஏற்றத்தாழ்வுகளைப் போதிக்கின்றது. ஆனால் வீடோ குழந்தைகளின் வாழ்வில் திருப்புமுனையாக அமைகின்றது. கயிறு எனும் கதையில் வரும் செழியன் தனது நண்பனான அம்பேத்தோடு வேறுபாடு அறியாது

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

பழகுகிறான். ஆனால் இருவரையும் சாதி என்னும் கட்டமைப்பு நட்பை உடைக்க முயற்சிக்கிறது. இதனை விஷ்ணுபுரம் சரவணன் கூறும்போது, **“செழியனைக் கட்டிக் கொண்டாள் அம்மா. பயப்படாதே… நீ எந்தத் தப்பும் செய்யல… தப்பு செய்யாதவங்க யாரப் பார்த்தும் பயப்படக்கூடாது செழியா… நாளைக்கு அந்தக் கடைக்கு மறுபடியும் போய், என் ஃப்ரெண்டுக்கு ஏன் இந்த கலர்ல கயிறு கொடுக்க மாட்டேங்குறீங்கனு கேளு… வேணும்னா காசு வாங்கிக்கோங்கன்னு சொல்லு… நான் உனக்குக் காலையில பாக்கெட் மணியோடு சேர்த்துப் பத்து ரூபா அதிகமாத் தாரேன் என்றார் அம்மா”[11].**

எனக் குறிப்பிடுவதனால் தாய் என்பவள் எதிர்காலச் சமுதாயத்திற்கு நல்ல குழந்தையை உருவாக்கும் திருப்பு முனையாகச் செயல்படுகிறாள் என்பதை உணரலாம். எனவே உண்மையான அன்பும் நட்பும் தாயின் செயல்பாடும் நல்ல ஒரு சமூகத்தைக் கட்டமைக்கும் என்பதை ஆசிரியர் தனது கதைகளில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகிறது.

**பிஞ்சு மனதில் நஞ்சை விதைத்தல்**

ஈர மண்ணில் எதை விதைத்தாலும் முளைக்கும் என்பது போல பிஞ்சு மனதில் சாதி என்னும் விதையை விதைக்க முற்படுகிறார்கள் சாதியப் பற்றாளர்கள். இவர்கள் தன்னை அழித்துக் கொண்டது மட்டுமல்லாமல் அடுத்து வரும் தலைமுறையின் வாழ்வையும் அழிக்கத் துடிக்கிறார்கள். இச்சிந்தனையைக் கயிறு எனும் சிறுகதை எடுத்துக் கூறும் போது, **“அம்மா கேட்டதும் செழியன் யோசித்தான்… அந்த அண்ணன் காரணம் எதுவும் சொல்லவில்லை. நண்பர்களோடு செழியன் பேசிக்கொண்டே சென்று கொண்டிருந்தான் அங்கு கடை வைத்திருக்கும் அவர் இவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். இவனும் ஓடிச் சென்று என்ன? என்று கேட்டான். கையை நீட்டச் சொன்னார். செழியன் இடக்கையை நீட்டியதும் 'இந்தக் கை இல்ல… அந்தக் கை' என்று சொன்னார். செழியனும் வலது கையை நீட்டினான். உடனே அவர் கடையின் மேஜையில் வைத்திருந்த ஒரு பிளாஸ்டிக் பாக்கெட்டிலிருந்து ஒரு மஞ்சள் நிறக் கயிற்றைக் கட்டி விட்டார்”[12].** என செழியனின் பிஞ்சு மனதில் நஞ்சை விதைக்கின்றனர் சிலர். இவர்களிடமிருந்து பிஞ்சு உள்ளங்களை நஞ்சாக்காமல் காப்பாற்ற வேண்டும் என்ற குழந்தைச் சமூகத்தின் மீதுள்ள அக்கறையினால் விஷ்ணுபுரம் சரவணன் சிறுகதையைப் படைத்திருக்கிறார் எனலாம்.

**முடிவுரை**

குடும்பமும் சமூகமும் தான் ஒரு குழந்தை வளர்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒரு குழந்தையைக் குடும்பம் சரியாக வளர்ப்பதற்கு முயல்கின்ற பொழுது சமூகம் அக்குழந்தையைத் திசை திருப்புகிறது.

CC BY ,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

சாதிய தீண்டாமையை அறியாமலேயே ஒரு குழந்தை சமூகத்தில் வளர்கிறது. பெரும்பான்மையான பெற்றோரும் அதைத் தெரியப்படுத்தாமலேயே வளர்க்கிறார்கள். குழந்தையைச் சுற்றியுள்ளவர்களாலே இக்கருத்தியலைக் குழந்தைகளுடைய மனதில் பதிய வைக்கின்றனர்.

கயிறு எனும் சிறுகதையில் கதையாசிரியர் விஷ்ணுபுரம் சரவணன் தன் கதையில் வரும் குழந்தைகளைச் சுயமாக சிந்திக்கும் திறனுடையவராகவும் முடிவெடுக்கும் திறனுடையவராகவும் காட்டுகிறார்.

தனது கதையில் வரும் செழியன் எனும் கதாப்பாத்திரத்தின் மூலமாக சாதி எனும் அடையாளக் கயிறை அறுத்தெரிந்து புதிய எதிர்காலச் சமூகத்தைச் சிறார்களிடத்தில் உருவாக்க முற்படுகிறார் ஆசிரியர். இக்கதையைப் படிக்கும் குழந்தைகள் செழியனைப் போலவே இச்சமூகத்தில் உள்ள எதிர்மறை சிந்தனையில் இருந்து வெளிவர வேண்டும் என ஆசிரியர் கருதுகிறார்.

**சான்றெண் விளக்கம்**

1. புறநானூறு, பாடல் எண் 374, புலியூர்க் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை-14, முதல் பதிப்பு, டிசம்பர் 2010.
2. விஷ்ணுபுரம் சரவணன், *ஒற்றைச் சிறகு ஓவியா*, பக். 78, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஜுலை 2025.
3. பாரதியார் கவிதைகள், *பாப்பா பாட்டு* – 15, வானவில் பிரசுரம், சென்னை, 1977.
4. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 13, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.
5. திருவள்ளுவர், குறள் எண்- 972, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.
6. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 15, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.
7. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 7, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.
8. வள்ளலார், *திருவருட்பா*, துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. (உரை), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1989.
9. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 12–13, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.
10. திருவள்ளுவர், குறள் எண் -800, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.
11. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 14, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.
12. விஷ்ணுபுரம் சரவணன், *கயிறு*, பக். 8, பாரதி புத்தகாலயம், சென்னை-18, ஏப்ரல் 2025.

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

**Referance**

1. **Purananuru**, Poem No. 374, Commentary by **Puliyur Kesigan**, Chennai: Saradha Publications, First Edition, December 2010.
2. **Vishnupuram Saravanan**, *Ottrai Siragu Oviya* (*Oviya of the Single Wing*), p. 78, Chennai: Bharathi Puthakalayam, July 2025.
3. **Subramania Bharati**, *Bharatiyar Kavithaigal* (*Poems of Bharatiyar*), “Pappa Paattu” (Children’s Song) – 15, Chennai: Vaanavil Publications, 1977.
4. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), p. 13, Chennai: Bharathi Puthakalayam, April 2025.
5. **Thiruvalluvar**, *Tirukkural*, Kural No. 972, Madurai: Madurai University, 1976.
6. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), p. 15, Chennai: Bharathi Puthakalayam, April 2025.
7. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), p. 7, Chennai: Bharathi Puthakalayam, April 2025.
8. **Vallalar**, *Thiruvarutpa* (*The Sacred Song of Divine Grace*), commentary by **S. Avvai Duraisamy Pillai**, Chidambaram: Annamalai University, 1989.
9. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), pp. 12–13, Chennai: Bharathi Puthakalayam, April 2025.
10. **Thiruvalluvar**, *Tirukkural*, Kural No. 800, Madurai: Madurai University, 1976.
11. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), p. 14, Chennai: Bharathi Puthakalayam, April 2025.
12. **Vishnupuram Saravanan**, *Kayiru* (*The Rope*), p. 8, Chennai: Bharathi Puthakalayam, April 2025.

Tamilmanam